திருவாரூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் செயல்முறை ஆணை
முன்னிலை : திரு. ப்பி. சசிகுமார்.

ந.க.அ4/ 737/ 2019 நாள்: 09.04.2019.

பொருள்: பொதுப்பணி – நில அளவைப் பதிவேடுகள் துறை, திருவாரூர் மாவட்டம் - திரு. ஜெ. பெனடிக்ட், இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக நியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்தல் - ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை: சென்னை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடித எண் 1162/PSD-H1/2019 நாள் 18.02.2019.
2) சென்னை நில அளவைப் பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குநரின் ஆணை ந.க.ர2/ 38646 / 2019 (நி.அ) (2) நாள் 08.03.2019.
3) இவ்வலுவலகச் செயல்முறை ஆணை ந.க.அ4/737/2019 நாள் 09.03.2019.
4) தொடர்புடைய பிற ஆவணங்கள்.

**********

ஆணை:-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் சென்னை இயக்ககக் கடிதம் மூலமாக திருவாரூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக ஆணையின்படி திருவாரூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 11.03.2019 முற்பகல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ள திரு. ஜெ. பெனடிக்ட் என்பவரது பணிகளை தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ், **'இளநிலை உதவியாளர்'** இனத்தில் 11.03.2019 முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

2) மேலும், இவ்வாணையானது இந்நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை ஆகியவற்றில் நிலுவையிலுள்ள வழக்குகளில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனையுடன் வெளியிடப்படுகிறது.

(ஒ-ம்) உதவி இயக்குநர்,
திருவாரூர்.

பெறுநர்:

திரு. ஜெ. பெனடிக்ட்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
திருவாரூர்.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது :

1) கூடுதல் இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, சென்னை.
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை.
3) மண்டலத் துணை இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, திருச்சிராப்பள்ளி.

நகல்: கண்காணிப்பாளர் I & II

நகல்: தகுதிகாண்பருவ பதிவேட்டிற்கு.

உபரி – 2.

(ஆணைப்படி / அனுப்பலாகிறது)

10/4/19

கண்காணிப்பாளர்.

10.4.19.